
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1069

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

143

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த நடிகர் குமரி முத்து அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# நடிகர் குமரி முத்து; கலையுலக உடன் பிறப்பு!

“இன்றைக்கு எத்தனையோ நடிகர்கள் அரசியலில் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் இன்றைக்கு ஒரு இடம் நாளைக்கு ஒரு இடம் என மாறிக்கொண்டே இருக்கிறார்கள். அது அவர்களின் சுபாவம். ஆனால், குமரிமுத்து அப்படி இல்லை. இன்றைக்கு வாழ்க என்று சொல்லிவிட்டு, அதன் பிறகு எத்தனை மனக்கசப்புகள் வந்தாலும் ஒழிக என்று கூறமாட்டார். அதற்குக் காரணம், தன்னுடைய இளம் வயதிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு, கழகத்தின் அபிமானியாக மாறியவர்” என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன்பிறப்பு நடிகர் குமரி முத்து.

“நகைச்சுவை நடிகர், கலையுலகில் கழகத்தின் கொள்கை முழக்கமாக விளங்கியவர். கலைவாணர் என்.எஸ்.கே.வைப் போலவே குமரி மாவட்டத்திலிருந்து கலைத்துறைக்கு வந்த குமரி முத்து அவர்களும் கலைவாணர் போலவே சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் நகைச்சுவையை நமக்கு வழங்கியவர். தன் வாழ்நாளின் இறுதி வரை உறுதிமிக்க தி.மு.க.காரராக வாழ்ந்தவர்” என இன்றைய கழகத் தலைவர் உணர்வுபூர்வமாக உரைத்தச் சான்று.

குமரி முத்து அவர்களின் சொந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காட்டுப்புதூர். 1940-ஆம் ஆண்டு, டிசம்பர் 20 அன்று பிறந்தவர். பள்ளிப்பருவத்திலேயே நாடகங்கள் மீது காதல் கொண்ட முத்து, அப்போதே சொந்தமாக நாடகங்கள் நடத்தி இருக்கிறார். எட்டாம் வகுப்போடு புத்தகப்பைக்கு விடை கொடுத்துவிட்டு, நாடகங்களில் முழுநேரமாக நடிக்கத் தொடங்கி இருக்கிறார். அந்த வகையில், தனது 14 வயதிலேயே 1954-ஆம் ஆண்டுவாக்கில் கலைத்துறைக்கு வந்தவர். சென்னை வந்த தொடக்கத்தில் சின்ன சின்ன மேடை நாடகங்களில் நடித்தவர், எம்.ஆர்.ராதாவின் நாடகக் குழுவில் இணைந்து ஆறு ஆண்டுகள் அந்த குழுவினருடன் பயணித்துள்ளார். பின்னர் 1964-ஆம் ஆண்டு முதல், திரைப்படங்களில் குமரி முத்துவாக நடிக்கத் தொடங்கி, தனது தொழில் வாழ்க்கையில் 700 படங்களுக்கும் மேல் நடித்தவர்.

### கழக அடிப்படை உறுப்பினர்

தனது வழக்கமான சிரிப்பால் அறியப்பட்ட நகைச்சுவை, குணச்சித்திர நடிகர். என்றாலும் குமரிமுத்து அவர்கள், தனது இளவயது காலம்தொட்டே கழகத்தின் அடிப்படை உறுப்பினர். கழக மேடைகளில் கொள்கை முழக்கமிட்ட சிறந்த சொற்பொழிவாளர். கழகத்தின் கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்த கொள்கைப் பெருமை கொண்டவர்.

குமரி முத்து அவர்கள், சினிமாவுக்கு முதல்தலைமுறை நடிகர் அல்ல. அவரது சகோதரர் நம்பிராஜன் அந்நாளில் மேடை மற்றும் சினிமா பிரபலம். எம்.ஆர்.ராதா நாடகக்குழுவில் இருந்தவர். பராசக்தியில் பூசாரியாக வருபவர்தான் நம்பிராஜன். கலை ஆர்வமும், திராவிட இயக்க அரசியல் ஈடுபாடுமாக இருந்த குமரி முத்து பேரறிஞர் அண்ணாவின் பேச்சாற்றலால் ஈர்க்கப்பட்டு, 20 வயதிலேயே கழக அரசியல் கொள்கைகளோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார்.




### ஒரே கட்சி தி.மு.க.தான்

இடைப்பட்ட காலத்தில் நடிகர்கள் சிலர் கழகத்தில் இருந்து விலகியபோது, பத்திரிகை யாளர்களிடம் பேசிய குமரிமுத்து,

“எனக்கு எந்தப் பதவியும் கிடைக்காததால் கட்சியை விட்டு வெளியேறுவேன் என புரளி கிளப்பிவிடப்படலாம். ஆனால், நான் எப்பவும் ஒரே கட்சிதான். அதனால, என்னை பற்றி தப்பான தகவல் எதுவும் போட்டுடாதீங்க. நான் எதையும் எதிர்பார்த்து கட்சியில் இல்லை. என் இறுதிக் காலம் வரை, உதய சூரியனுக்கு ஒட்டு கேட்பேன். கழக மேடைகளில் என் முழக்கம் ஒலிக்கும். தலைவரும் தளபதியும் கூடத் தடுக்க முடியாது. ஏனென்றால் நான் கழகத் தொண்டன்'' என உறுதியோடு அறிவித்த வர். அப்படி, எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாமல் கழகத் தொண்டனாகத் திகழ்ந்த அவருக்கு, 2014-ஆம் ஆண்டில் கழகத்தின் முப்பெரும் விருதுகளில், தனது பெயரிலான விருதினை வழங்கி சிறப்பு செய்ததுடன், ‘கலையுலக உடன்பிறப்பு’ என அவருக்கு அடையாளம் சூட்டினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

தலைவர் கலைஞர் மீது அளப்பரிய அன்பும் மரியாதையும் கொண்டவர் குமரிமுத்து. கழகப் பற்றாளராக இருந்த அவரை முத்தமிழறிஞர் கலைஞர் முழுமையாக அரசியல் செயல்பாடுகளில், 1989-ஆம் ஆண்டு இறங்க வைத்தார். அந்த ஆண்டு தேர்தல் பிரச்சாரத்துக்கு குமரி முத்துவின் பெயரை அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அன்று கழக மேடைகளில் ஏறி முழங்கத் தொடங்கிய குமரிமுத்து அவர்கள், 25 ஆண்டுகளுக்கும் மேல் தமிழ்நாடு முழுவதும் கழகக் கூட்டங்களில் கொள்கை உரையாற்றியவர்.

“நடிகராக இருந்தாலும், மிக எளிமையாக, கழகத்தின் இதர பேச்சாளர்கள் போலவே தன்னை வெளிக்காட்டிக் கொண்டவர். சுயமரியாதை குணமும், திராவிட இயக்க வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பேசக்கூடிய சிறந்த உரையாளர். கிராமங்கள், நகரங்களின் இடுக்குகளில் எல்லாம் சென்று எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், கழகத்துக்காக தீவிர பிரச்சாரம் செய்தவர். அதனால், அவர் தனிப்பட்ட முறையில் பல திரைப்பட வாய்ப்புகளை இழந்திருக்கிறார்” எனக் கூறுகிறார் தலைமைக் கழகப் பேச்சாளர் சாவல்பூண்டி சுந்தரேசன்.

> **‘கலைஞரின் தொண்டராக கழகத்தின் பிரச்சார ஆயுதமாக மேடைதோறும் முழங்கியவர். அவரது சிரிப்பும் சிந்தனையும் நம் கழகத்தின் பயணத்தில் என்றும் துணை நிற்கும்!’**

“75 வயதில், கலைஞர் பெயரில் விருது என்றபோது சிறுவனைப்போல துள்ளிக் குதித்தேன். கலைஞரின் இலக்கியத்தில், தமிழில், அரசியலில் மயங்கியவன் நான். அவர் பெயரில் விருது கிடைத்ததை பிறவிப்பயனாக கருதுகிறேன்” என அந்த மேடையில் உவகையோடு உரையாற்றினார் இந்தக் கலையுலக உடன்பிறப்பு.

அவரது கொள்கைப் பற்றுக்கு ‘பெரியார் விருது’ வழங்கி பெருமை சேர்த்தது திராவிடர் கழகம். அதே காலகட்டத்தில் கழகத்தின் கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் துணைத் தலைவராகவும் தனது கடமையாற்றி வந்தார்.

### கலையுலக கொள்கை முழக்கம்

கழகப் பணிகளுடன், நடிகர் சங்கத்தின் செயல்பாடுகளை முறைப்படுத்த வேண்டும் என சட்டப் போராட்டத்தை நடத்தியவர் . எதிர்பாராத வகையில், 2016 பிப்ரவரி 29 அன்று தனது 76-வது வயதில் உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். கலைஞரின் இரங்கல் உரை குமரிமுத்து அவர்களின் புகழைப் பாடியது. ‘கலையுலகில் கழகத்தின் கொள்கை முழக்கம், தன் வாழ்நாளின் இறுதி வரை உறுதிமிக்க தி.மு.க.காரராக வாழ்ந்தவர்’ என இரங்கலில் குறிப்பிட்டார் கலைஞர்.

குமரிமுத்து அவர்களின் நினைவினைப் போற்றிய இன்றைய கழகத் தலைவர் அவர்கள், ‘கலைஞரின் தொண்டராக கழகத்தின் பிரச்சார ஆயுதமாக மேடைதோறும் முழங்கியவர். அவரது சிரிப்பும் சிந்தனையும் நம் கழகத்தின் பயணத்தில் என்றும் துணை நிற்கும்’ என போற்றி இருந்தார். அந்த சொற்களை கழகம் காப்பாற்றி வைக்கும்.

...துடிக்கும்



## சிங்கப்பூரில், ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’!

முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியிட்ட, ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூலின் அறிமுக நிகழ்ச்சி, டிசம்பர் 27-ஆம் தேதி அன்று சிங்கப்பூர் கழக நண்பர்களால் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இருந்து, சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ் அவர்கள் தலைமையேற்று நூல் அறிமுக நிகழ்ச்சியை நடத்தினார்.

வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் (NRTIA) சங்கத்தின் அமைப்பாளர் நரசிம்மன் நரேஷ் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், துணை அமைப்பாளர்கள் ஏ.கே.பி.ஆரிப், அஜ்மீர் அலி, கலைஞரிஸ்ட் கலைச்செல்வி, இராமநாதபுரம் அயலக அணி துணைத்தலைவர் ரபீக் பிலால், திருவரங்ககுளம் கிழக்கு ஒன்றியத் துணை அமைப்பாளர் சுரேஷ் சுரேகா, ஜெகன், லோகநாதன், தினா தினகரன், மாங்குடி பிரபாகரன், கவாஸ்கர், கதிர், அப்துல் ரஹ்மான், மன்னை கவி, இலால்பேட்டை இஸ்மாயில், வேலு பாவாடைசாமி, ஆனந்தராஜ், இலால்பேட்டை ராம்குமார் என கழக உடன்பிறப்புகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

நூல் அறிமுகத்துடன், இளைஞர் அணிச் செயலாளர் முன்னெடுக்கும் பல கருத்தியல் செயல்பாடுகளையும் இறையன்பன் குத்தூஸ் சிங்கப்பூர் தமிழர்களிடையே பகிர்ந்து கொண்டார்.

கழகத்துக்கு 200 இளம் பேச்சாளர்களை உருவாக்கியது, அறிவுத் திருவிழா, முற்போக்கு புத்தகக் காட்சி என இளைஞர் அணிச் செயலாளரின் பணிகள், கழகத்துக்கு அறிவாயுதம் ஏந்தும் படைகளை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றது. உலகெங்கிலும் உள்ள கழக உணர்வாளர்களுக்கு ஊக்கமளிக்கட்டும், சிங்கப்பூர் நூல் அறிமுக நிகழ்வு.

## ஃப்ளாஷ்பேக்



### மேடையில் தலைவரை வரவேற்றேன்!



எம்.சரண்ராஜ்

2011-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது, கழக வேட்பாளரை ஆதரித்து ஆம்பூர் நகரத்தில் மிகப்பெரிய பொதுக்கூட்டம், அன்றைய கழகப் பொருளாளர் - இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது, ஆம்பூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளராக பணியாற்றி வந்த நான், மேடையில் தலைவருக்குப் பொன்னாடை வழங்கி வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம். தலைவரை அருகில் பார்த்த மகிழ்ச்சியான தருணம்.

**- எம்.சரண்ராஜ், இளைஞர் அணி நகர அமைப்பாளர், ஆம்பூர் நகரம், திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 21 ஆயிரம் வாக்கு வித்தியாசம்!

1967-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், 25 இடங்களில் போட்டியிட்ட கழகம், 25 இடங்களிலும் வென்றது. பேரறிஞர் அண்ணா தென்சென்னை தொகுதியில் வெற்றிபெற்றார். சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், கலைஞர் 21 ஆயிரம் வாக்குகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131